Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**

**CUDDALORE**

**Sessions** **Case No. 59 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.1**
Defence
Court

| | |
|---|---|
| Name | கார்த்திக் |
| Father's name | பரமசிவம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 27 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 19th day of August 2024.**

(G.VIJAYAKUMAR) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 19th day of August 2024.**

1 முதல் 6 எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

நான் தற்போது பண்ருட்டி தாலுக்கா, திருவதிகை கிராமத்தில் வசித்து வருகிறேன். கோயில் வேலை செய்து வருகின்றேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கில்

இறந்துபோன சாந்தகுமார் எனது அண்ணன். எனது பெரியப்பா மகன் சக்திவேல், முதல் எதிரி ஞானவேலின் சகோதரியை காதலித்து திருமணம் செய்துகொள்வதாக கூறி, பின்னர் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளாததால், ஞானவேல் தரப்பினர், சக்திவேல் மீது பண்ருட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வழக்கு கொடுத்திருந்தனர். சக்திவேலுக்கு ஆதரவாக எனது அண்ணன் சாந்தகுமார் போனதால், என் அண்ணன் சாந்தகுமார் மீது எதிரிகள் விரோதமாக இருந்தார்கள். கடந்த 05.09.2020 அன்று மாலை 06.30 மணி அளவில், திருவதிகை மண்டபம் பஸ் நிறுத்தம் அருகில் நானும் என் அண்ணன் சாந்தகுமாரும் நின்றுபேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் கைகளில் ராடு மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களுடன் வந்து, முதல் எதிரி ஞானவேல் ராடால் சாந்தகுமாரின் தலையில் அடித்தார். அப்போது எதிரிகள் பிரகாஷ், பிரதீப் ஆகியோர் சாந்தகுமாரின் கையை பிடித்துக்கொண்டு இவனால் தான் நம் வீட்டு பெண்ணின் வாழ்க்கை வீணாகிவிட்டது என்று சொன்னார்கள். தடுக்கசென்ற என்னையும் எதிரிகள் குமரன், கோபி, விஜயகுமார் ஆகியோர் கையால் அடித்து கீழே தள்ளினார்கள். எனக்கு உள் காயங்கள் ஏற்பட்டது. நான் கடலூரில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என் அண்ணன் சாந்தகுமாரை எதிரி குமரன் வலது நெஞ்சில் கத்தியால் குத்தினார். எதிரி கோபி என் அண்ணன் சாந்தகுமாரை அடிவயிற்றில் கத்தியால் குத்தினார். எதிரி விஜயகுமார் இடது பக்கம் என் அண்ணனை கத்தியால் குத்த வந்தபோது, கையால் என் அண்ணன் தடுத்தார், அதில் என் அண்ணனுக்கு கையில் காயமேற்பட்டது. அப்போது சுமார் மூன்று அடி தள்ளி என் அம்மா அங்கு இருந்தார். என் அம்மா தடுக்கவந்தபோது, அவரையும் எதிரிகள் மிரட்டினார்கள். அங்கு இருந்த சாய் ஓட்டலின் உரிமையாளரும் தடுக்க வந்தனர். இதற்கு பிறகு இந்த ஏரியாவில் நாங்கதான் என்று சொல்லிக்கொண்டே எதிரிகள் கத்தியை தரையில் தேய்த்துக்கொண்டு போய்விட்டார்கள். அடிப்பட்ட எனது அண்ணன் சாந்தகுமாரை இருசக்கர வாகனத்தில்

ஏற்றிக்கொண்டு, பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் அண்ணனுக்கு ஊசி போட்டு, மேல்சிகிச்சைக்காக, கடலூர் அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். அதன்படி என் அண்ணனை காரில், கடலூர் அரசு மருத்துவமனைக்கு நானும் என் அம்மாவும் அழைத்து சென்றோம். அங்கு அட்மிட் செய்த அரைமணி நேரத்தில் என் அண்ணன் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக பண்ருட்டி காவல்நிலையத்தில் அன்றிரவு 11.00 மணிக்கு நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கார்த்திக் என்ற கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் மனு அசாஆ 1 ஆகும்**. இந்த புகாரை எனது நண்பர் மணிகண்டன் என்பவர் எழுதினார். விவரங்களை நான் தான் அவருக்கு சொன்னேன். என்னிடம் காட்டப்படும் இரும்பு பைப்பால் தான் முதல் எதிரி என் அண்ணனின் தலையில் அடித்தார். **சுமார் 75 செ மீ நீளமுள்ள அந்த இரும்பு பைப் சா பொ 1 ஆக குறியீடு செய்யப்படுகி**றது. என்னிடம் காட்டப்படும் ஆரஞ்சு கலர் கைப்பிடி போட்ட கத்தியால் தான் எதிரி குமரன், என் அண்ணனை தாக்கினார். **சுமார் 20 செ மீ நீளமுள்ள ஆரஞ்சு கலர் கைப்பிடியுடன் கூடிய Rocket Stainless என்று எழுத்து பொறிக்கப்பட்ட சின்ன கத்தி சா பொ 2 ஆக குறியீடு செய்யப்படுகிற**து. என்னிடம் காட்டப்படும் இரண்டு கத்திகளை சம்பவத்தின்போது எதிரிகள் கோபி மற்றும் விஜயகுமார் ஆகியோரின் கைகளில் இருந்தது. **சுமார் 20 செ மீ நீளமுள்ள நீல நிற பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய Rocket Stainless என்று எழுத்து பொறிக்கப்பட்ட சின்ன கத்திகள் சா பொ 3 வரிசை (மொத்தம் 2 எண்ணிக்கைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிற**து. மறுநாள் என் அண்ணனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து, எங்களிடம் ஒப்படைத்தார்கள். என் அண்ணனின் உடலின் மீது பயிற்சி பெண் காவல்துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்கள். அப்போது

நானும் இருந்தேன். என்னையும் அவர் விசாரித்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

சம்பவம் நடந்த இடத்திலிருந்து பண்ருட்டி காவல்நிலையம் சுமார் 2 கிமீ தூரத்தில் உள்ளது. எதிரிகள் அனைவரும் வெவ்வேறு தெருவைசேர்ந்தவர்கள் என்றால் சரிதான், ஆனால் இரண்டு பேர்கள் ஒரே தெருவை சேர்ந்தவர்கள். நானும் என் அண்ணன் சாந்தகுமாரும் இருப்பது எடப்பாளையத்தெரு என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து எடப்பாளையத்தெரு, சுமார் 150 மீ தூரத்தில் உள்ளது. எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு நான் மறுநாள் 06.09.2020 அன்று காலை 06.00 மணிக்கு, கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம், பண்ருட்டி -- பாலூர் மெயின்ரோடில் உள்ளது என்றால் சரிதான். பண்ருட்டி -- பாலூர் மெயின்ரோடுக்கு வடக்கு பக்கம் பழைய கடலூர் சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்கே சிவன்கோயில், சேகர் வீடு, விநாயகர் கோயில் மற்றும் கோயில் மண்டபம் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். கிழக்கே கோபிநாத் என்பவரின் ஓட்டுவீடு, ஆறுமுகம் என்பவரின் கூரை வீடு, முருகையன் ஓட்டல் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். வெங்கட்ராமன் ஓட்டு வீடும் உள்ளது என்றால், அது யாருடைய வீடு என்று தெரியாது. தெற்கே, செந்தாமரை ஓட்டுவீடு, சக்கரவர்த்தி மாடிவீடு, விநாயகர் கோயில், ரவி அடகு கடை, மனோகர் வீடு ஆகியவை உள்ளது என்றால், சரிதான். பஸ் ஸ்டாப் அருகே கட்டிடம் எதுவும் கிடையாது. பஸ் ஸ்டாப், சிவன்கோயில் முன்புறம் உள்ளது. நான் சொல்ல சொல்ல மணிகண்டன் எழுதியதாக அசாஆ 1 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட என் அண்ணனை நான் எத்தனை மணிக்கு, எந்த வாகனத்தில், மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்ற விவரம் அசாஆ 1 ல்

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பண்ருட்டி அரசு மருத்துவமனையில், என் அண்ணனுக்கு ஊசி போட்டார்கள் என்ற விவரமும், எத்தனை மணிக்கு காரில் என் அண்ணனை கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்ற விவரமும், அசாஆ 1 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கடலூர் அரசு மருத்துவமனையில் எத்தனை மணிக்கு என் அண்ணனை சேர்த்தோம் என்ற விவரமும், யார் சேர்த்தார்கள் என்ற விவரமும், எத்தனை மணிக்கு இறந்தார் என்ற விவரமும், அசாஆ 1 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது பெரியப்பா மகன் சக்திவேல், முதல் எதிரி ஞானவேலின் சகோதரியை காதலித்து திருமணம் செய்துகொள்வதாக கூறி, பின்னர் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளாததால், ஞானவேல் தரப்பினர், சக்திவேல் மீது பண்ருட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வழக்கு கொடுத்திருந்தனர் என்ற விவரமும், சக்திவேலுக்கு ஆதரவாக எனது அண்ணன் சாந்தகுமார் போனதால், என் அண்ணன் சாந்தகுமார் மீது எதிரிகள் விரோதமாக இருந்தார்கள் என்ற விவரமும், அசாஆ 1 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு போகவேண்டுமென்றால், பண்ருட்டி காவல்நிலையம் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால் இல்லை, வேறு வழி இருக்கிறது. சக்திவேல் பெயரில் கேஸ் நிலுவையில் இருக்கிறதா என்றால் ஆமாம். வழக்கு சம்பவத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு சக்திவேலை போலிசார் கைது செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். முதல்எதிரியின் சகோதரி, சக்திவேல் மீது புகார் கொடுத்தபோது சக்திவேலுவுடன் என் அண்ணன் சாந்தகுமார் போனார். என்றைக்கு காவல்நிலையம் போனார் என்றால், 02.09.2020 அன்று போனார். சக்திவேலை போலிசார் கைது செய்தபிறகு எங்கள் குடும்பத்திற்கும் 1வது எதிரி குடும்பத்திற்கும், பேச்சுவார்த்தை இருந்ததா என்றால் நாங்கள் போக வருவதை பார்த்து, ஞானவேலின் ஆயா திட்டினார். ஞானவேலின் ஆயா

ஞானவேலின் பெரியப்பா வீட்டில் தான் இருந்தார் என்றால் இல்லை, ஞானவேலின் வீட்டில்தான் இருந்தார். ஞானவேலின் ஆயா திட்டியது சம்மந்தமாக போலிசில் புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. அசாஆ 1 புகாரிலும், போலிசார் விசாரணையிலும், நானும் என் அண்ணனும் எதற்காக பஸ் ஸ்டாப்பிற்கு போனோம் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் பஸ் ஸ்டாப்பில் இருந்த விவரம் எதிரிகளுக்கு எப்படி தெரியும் என்ற விவரத்தை அசாஆ 1 புகாரிலும், போலிசார் விசாரணையிலும், சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கத்திகளின் நிறங்களை பற்றி அசாஆ 1 புகாரிலும், போலிசார் விசாரணையிலும், சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் குமரன், கோபி, விஜயகுமார் ஆகியோர் என்னென்ன ஆயுதங்களை வைத்திருந்தார்கள் என்ற விவரத்தை அசாஆ 1 புகாரிலும், போலிசார் விசாரணையிலும், சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக இரண்டுமுறை விசாரித்தார்கள். அந்த இரண்டு முறையும் யார் யார் எந்தெந்த கத்திகளை வைத்திருந்தார்கள் என்ற விவரத்தையும், கத்திகளின் நிறங்களை பற்றியும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை எதிரிகள் கீழே தள்ளியபிறகு நான் சத்தம் போட்டதும், என் அம்மா அங்கு வந்ததாக நான் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் அண்ணனுக்கு தலையில் அடிபட்டபோது என் அம்மா பார்த்ததாக புகாரில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு, நானோ என் அண்ணனோ அங்கிருந்து ஓட முயற்சி செய்தோமா என்றால் இல்லை. சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் ஓரளவிற்கு மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியாகும். என் அண்ணனை டுவீலரில் ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றபோது என் சட்டையில் ரத்தக்கறை பட்டதா என்றால் ஆமாம். அந்த சட்டையை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் சத்தம் போட்டதும் அங்கு கும்பல் சேர்ந்ததா

என்றால் ஓரளவு கும்பல் சேர்ந்தது. அப்போது போலிசார் அங்கு வந்தார்களா என்றால் நாங்கள் ஆஸ்பத்திரிக்கு போனதும் போலிசார் வந்துள்ளார்கள். என் அண்ணன் கோவிலில் சுதை வேலை ( சிற்பவேலை) செய்வார். என் அண்ணன் ஊரில் உள்ள பிரச்சினைகளில் தலையிட்டு போலிஸ் ஸ்டேஷனுக்கு செல்லும் வழக்கம் உண்டு என்றாலும், அங்கு பஞ்சாயத்து பேசி சமாதானம் செய்து வைப்பார் என்றாலும், சரியல்ல. சக்திவேல் மீது வழக்கு போட்டு அவரை ஜெயிலுக்கு அனுப்பியதால் 1வது எதிரி குடும்பத்திற்கும் சக்திவேல் குடும்பத்திற்கும் விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். என் அண்ணன் சாந்தகுமார் சக்திவேலிடம் 1வது எதிரியின் சகோதரியை திருமணம் செய்துகொள்ளும்படிதான் சொன்னார் என்றாலும் இல்லையென்றால் போலிசார் கேஸ் போட்டு ஜெயிலுக்கு அனுப்பி விடுவார்கள் என்றும், சக்திவேலிடம் சொன்னார் என்றால், சரியல்ல. எங்களுக்கும் எதிரிகள் பிரகாஷ், பிரதீப் ஆகியோர்களுக்கும் எந்தவிரோதமும் இல்லை என்றால் சரிதான். அவர்கள் 1வது எதிரியின் உறவினர்கள் அல்ல என்றால் சரிதான், ஆனால் அவருடைய நண்பர்கள். எதிரி விஜயகுமாரை அடித்ததாக என் அண்ணன் மீது எதிரி விஜயகுமார் பண்ருட்டி காவல்நிலையத்தில் கேஸ் கொடுத்திருந்தார் என்றால் இல்லை. கிரிக்கெட் ஆடும்போது அவர்களுக்குள் தகராறு நடந்துள்ளது. அதனால் அவர்களுக்குள் விரோதம் இருப்பதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். இதுநடந்தது என் அண்ணன் இறப்பிற்கு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு. அதன்பின்னர் என் அண்ணனும் எதிரி விஜயகுமாரும் சமாதானமாகிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் மீது ஊரில் நிறைய பேருக்கு விரோதம் இருந்ததால், அவர்களில் யாரோ தான் என் அண்ணனை தாக்கியுள்ளார்கள் என்றாலும், அவர்கள் தான் என் அண்ணன் இறப்பிற்கு காரணம் என்றாலும் சரியல்ல. எனக்கோ என் அம்மாவுக்கோ, வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

என் அண்ணன் பிரேதம் கடலூர் அரசு மருத்துவமனையில் இருப்பதாக கேள்விப்பட்டு, அதன்பின்னிட்டு, சக்திவேல் குடும்பத்தினரின் தூண்டுதலின்பேரில் மண்டபம் பஸ் ஸ்டாப்பில் நானும் என் அண்ணனும் நின்று கொண்டிருந்தபோது, எதிரிகள் வந்து எங்களை தாக்கியதாக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் சொல்வது போல் சம்பவம் நடந்திருந்தாலும், அதில் எனக்கு காயம் ஏற்பட்டிருந்தாலும், அன்றைய தினமே நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-G.Vijayakumar*
*I Additional District Judge*
*Cuddalore.*